DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC.NO.169/2024

Deposition of LW2 examined as PW2 Date: 16.09.2025

| | |
|---|---|
| Name | செந்தில்குமார் |
| Father's/Husband's Name | மாரிமுத்து |
| Village | திருவிழந்தூர் |
| Taluk | |
| Age | 51/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.09.2025
(A2, A3 Present. A1 absent. Petition u/s. 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் செந்தூர்பைனான்சில் கலெக்ஷன் ஏஜெண்டாக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 எங்களது பைனான்சில் கடன் பெற்றிருந்தார். அந்த கடன் தொகையை வசூல் செய்வதற்காக 3 நாட்களுக்கு ஒருமுறை சென்று அவரிடம் தவணை தொகையை பெற்று வருவேன். அதன் மூலம் எனக்கு அவர் பழக்கமானார். கடந்த 22.01.2022 ம் தேதி அன்று வசூல் செய்வதற்காக அ.சா.1 ன் வீட்டிற்கு சென்றேன். அப்போது அவர் வீட்டில் இல்லை. அவர் வயலில் இருப்பதாக அவருடைய மனைவி என்னிடம் கூறினார். நான் அவரை பார்ப்பதற்காக வயலுக்கே சென்றுவிட்டேன். அ.சா.1 அவருடைய இடத்தில் வேலி வைத்து அடைத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்து ஆஜர் எதிரிகள் மூவரும் அ,சா.1 ஐ குச்சிக்காரி தேவுடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டினர். 1ம் எதிரி முத்தலீப்பும், 2ம் எதிரி ஜியாவுதீனும் அவரை கையால் அடித்து கீழே தள்ளி விட்டனர். 3ம் எதிரி முவாசீன் டிராக்டரை எடுத்து வந்து அ,சா.1 ன் மீது மோதுவது போல் வந்தார். அ,சா.1 அந்த இடத்தை விட்டு ஓடி வந்து விட்டார். அவருடன் நானும் ஓடி வந்து விட்டேன். நான் அ,சா.1 ஐ எனது இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அ,சா.1 க்கு மேற்படி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பிறகு அவரை அழைத்துக்கொண்டு குத்தாலம் காவல்நிலையத்திற்கு சென்றோம். அ.சா.1 மேற்படி பிரச்சனை தொடர்பான புகார் மனுவினை கொடுத்தார். அவருடன் நானும் இருந்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையிலே சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

16/9/25

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை.